


கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (16.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், ஒரத்தநாடு மற்றும் நெய்வேலி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்குப் புத்தகத்தையும் வழங்கினார்.

## "உடன்பிறப்பே வா"

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை!

சென்னை, ஆக. 18 -

"உடன்பிறப்பே வா" எனும் தலைப்பில், தி.மு.க. நிர்வாகிக ளுடன், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரடியாக ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

கழகத் தலைவரும், முதலமைச்சரு மான மு.க .ஸ்டாலின் அவர்கள் 'உடன்பிறப்பே வா' எனும் தலைப்பில் தொகுதி வாரியாக தி.மு.க. நிர்வாகிகளை, தனித் தனியாக சந்தித்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். இந்த சந்திப்பின்போது, கட்சியின் ஆக்கப்பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து திமுக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.

இந்நிலையில், மூன்று தொகுதிகளைச் சேர்ந்த கட்சியின் நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் ஆலோசனை மேற்கொண்டார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் இந்த கலந்துரையாடலில், மூன்று தொகுதிகளை சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் பங்கேற்றனர்.

அப்போது "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பில் பூத் அளவிலான உறுப்பினர் சேர்க்கை குறித்தும், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் குறித்த விவரங்களை யும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.




நேற்று முன்தினம் (16.8.2025) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சேலத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.





அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (16.8.2025) தருமபுரிக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.


